**கவனிக்க.**- 22.08.2025 ஆந் திகதிய 2451 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.



# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2452 - 2025 අගෝස්තු මස 29 වැනි සිකුරාදා - 2025.08.29

2452 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)



| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1338 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1346 |



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோறாள**,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1335 - B 82714- 403 (2025/08)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் சேவையில் வகுப்பு I தரம் III இற்கு திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு – 2025

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் சேவையில் வகுப்பு I தரம் III இல் காணப்படுகின்ற 3 வெற்றிடங்களை திறமையின் அடிப்படையில் நிரப்புவதற்காக கீழ் குறிப்பிட்டுள்ள தகுதிகளையுடைய அரசாங்க சேவையில் ஏற்கனவே கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினது சட்டத்திட்டங்களுக்கமைய விண்ணப்பம் கோரப்படுகின்றது.

(அ) விண்ணப்பம் கோரல் முடிவுத் திகதி 2025.09.26 ஆந் திகதியாகும்.

**குறிப்பு** : விண்ணப்பம் அல்லது அது தொடர்பான கடிதம் ஏதும் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எத்தகைய முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி வரை விண்ணப்பத்தினை தாமதப்படுத்துவதால் ஏற்படும் நட்டங்களுக்கு விண்ணப்பதாரரே பொறுப்பாவர்.

01. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை:**

அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதார்களில், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முக குழாம் ஒன்றினால் நடத்தப்படுகின்ற சேவை அனுபவம் மற்றும் திறமைக்காக புள்ளிகள் வழங்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சையினது பெறுபேறுகளுக்கமைய, உரிய ஏனைய தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்துள்ளதாக நியமன அதிகாரியினால் தகுதிகளை பரீட்சித்துப்பார்த்து உறுதிப்படுத்திக்கொண்டதன் பின்னர் கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சையின் திறமையின் ஒழுங்குமுறைக்கமைய வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவர். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 5 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கப்படும் நடைமுறை விதிமுறைகளுக்கேற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சை நடாத்தப்படும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படி நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் திகதி அல்லது அதற்கு பிந்தைய திகதியாக இருக்கும்.

02. **பணிக்கமர்த்துவதற்கான சேவை நியதிகளும் நிபந்தனைகளும் :**

I. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும் நீங்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும்/ தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும் பங்களிப்பு செய்ய வேண்டும்.

II. இந்த பதவியில் நியமனம் பெறும் ஒருவர் ஒரு வருட கால தகுதிகூர் காலத்திற்கு உட்படுத்தப்படுவீர்கள்.

III. இலக்கம் 18/2020 மற்றும் 2020.10.16 ஆம் திகதியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கையில் மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய, உரிய மற்றைய அரச கரும மொழியில் / அரச கரும மொழிகளில் திறமையினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

IV. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள இலக்கம் SE/EST/2/1/25/1/4/2010 மற்றும் 2013.10.22 ஆம் திகதியிடப்பட்ட பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகைக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், குறித்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும்

அரசாங்க சேவையின் பதவிகளை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினது செயற்பாட்டு நடைமுறைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையினதும் அரசாங்க நிதி ஒழுங்கு விதிமுறைகளுக்கும் திணைக்கள ஏனைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டது.

V. பதிவாளர் சேவையில் வகுப்பு I தரம் III இற்கு நியமிக்கப்பட்டு மூன்று வருட (3) காலங்கள் பூர்த்தியாவதற்கு முன்னர் ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கமைய முதலாவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

VI. விண்ணப்பிக்கும் மொழி ஊடகத்தினை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாததுடன், நீங்கள் நியமனத்தை பெறுவதற்கு தகுதியுடைய மொழி ஊடகமாவது, உங்களால் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழி ஊடகமாகும்.

03. **சம்பள அளவுத்திட்டம் :**

இலக்கம் 10/2025 உடைய 2025.03.25 ஆம் திகதியிடப்பட்ட பொது நிர்வாக சம்பள சுற்றறிக்கையில் ஏற்பாடுகளுக்கமைய இந்த பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 82,150 - 10 x 2,400 - 8 x 2,940-17 x 3,900 - 195,970.00 (SL-1-2025)

04. **தகைமைகள் :**

4.1 **கல்வித் தகைமைகள் :**

ஏற்புடையதன்று.

4.2 **அனுபவம் :**

(அ) விண்ணப்பப்படிவம் கோரப்படும் இறுதி திகதிக்கு பதிவாளர் சேவையில் வகுப்பு II இல் (முகாமைத்துவ உதவியாளர் – சுப்ரா வகுப்பு சேவை வகை) குறைந்த பட்சம் எட்டு (8) வருட சேவைக் காலத்தினை பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

4.3 **உடற்றகைமை :**

சகல விண்ணப்பதாரர்கள் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவைபுரிவதற்கும், பதவியில் கடமையாற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் மன ரீதியான தகுதியை உடையவராக இருத்தல் வேண்டும்.

4.4 **ஏனைய தகைமைகள் :**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
- விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும் ;
- அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினது சுற்றறிக்கை 01/2020 மற்றும் அதன் திருத்தங்களில் குறிப்பிடப் பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய நடத்தைசார் தண்டனையொன்றுக்கு உட்பட்டிருத்தல் கூடாது;
- விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் சகல விதத்திலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

4.5 **வயது எல்லை :**

ஏற்புடையதன்று.

05. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை:**

கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் விபரமான நடைமுறைகள்

| *தொ. இல.* | *பாடம் (விடயம்)* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01. | **சேவை அனுபவம்**<br><br>மேலே தொடர் இலக்கம் 4.2 கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை தகைமைகளுக்கு மேலதிகமாக தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்திற்காக புள்ளிகள் வழங்கப்படும். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2019 மற்றும் அதன் திருத்தங்களின் விதிகளின்படி, மேலதிக சேவைக் காலத்துக்காக புள்ளிகள் வழங்கப்படும் போது அதிகமான தொடர்ச்சியான சேவைக் காலம் மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தையுடைய உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் மொத்தப் புள்ளிகளும் வழங்கப்படுவதுடன், ஏனைய உத்தியோகத்தர்களுக்கு சமவிகிதாசாரத்தில் மேலதிக சேவைக் காலத்துக்காக புள்ளிகள் வழங்கப்படுவதும் இடம்பெறும். (06 மாதங்கள் அல்லது அதற்கு அதிகமான சேவைக்காலத்துக்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) | | **50** |
| 02. | **திறமை**<br><br>2.1 **தொழில்சார் தகைமைகள்:**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது பட்டமளிப்பு செய்யும் நிறுவனமொன்றென குறித்த ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றில் அல்லது அரசாங்க உயர்கல்வி நிறுவனமொன்றில் பெற்றுக்கொண்ட முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம் அல்லது சட்டம் பற்றிய பட்டபின் படிப்பு டிப்ளோமா அல்லது அதற்கு மேலதிக மான தகுதிக்கு | 05 | **35** |
| | 2.2 **பதவிக்குரிய விடய காரணங்கள் மற்றும் சட்ட ஒழுங்கு விதிகள் பற்றிய அறிவு** | | |
| | I. விவாகம், பிறப்பு மற்றும் இறப்புகளை பதிவு செய்தலுக்குரிய விடயங்கள் மற்றும் சட்ட ஒழுங்குவிதிகள் பற்றிய அறிவு | 10 | |
| | II. ஆவணங்களை பதிவு செய்தல் மற்றும் இறப்புகளை பதிவு செய்தலுக்குரிய விடயங்கள் மற்றும் சட்ட ஒழுங்குவிதிகள் பற்றிய அறிவு | 10 | |
| | III. சாதாரண அலுவலக நிர்வாக அறிவு | 10 | |

| *தொ. இல.* | *பாடம் (விடயம்)* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 03. | **மொழித்திறன்** | | 05 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப் படிப்பில் ஆங்கில பாடம் பிரதான பாடமாக கற்றிருத்தலுக்காக | 05 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆங்கில மொழிக்காக பெற்றுக்கொண்ட டிப்ளோமா அல்லது வேறு அரசாங்க பயிற்சி நிறுவனமொன்றில்/ அரசாங்க பயிற்சி நிறுவனத்துடன் இணைந்த நிறுவனமொன்றினால் குறைந்த பட்சம் 1500 கற்றல் மணித்தியாலங்கள் பாடநெறி ஒன்றினை பயின்று பெற்றுக்கொண்ட ஆங்கில மொழிக்கான டிப்ளோமா. | 04 | |
| | (இ) கல்விப் பொது தராதர (உயர் தர) பரீட்சையொன்றில் (உள்நாட்டு அல்லது இலண்டன்) ஆங்கில மொழிக்கு குறைந்த பட்சம் அதி விஷேட சித்தி பெற்றிருத்தல் அல்லது IELTS மொத்த புள்ளிகள் 6.5 அல்லது அதற்கு கூடிய, TOEFL-IBT 79 அல்லது அதற்கு கூடிய அல்லது TOEFL–PBT 550 அல்லது அதற்கு அதிகமாக இருத்தல். | 03 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றில் ஆங்கில மொழி தொடர்பாக பயின்ற மூன்று மாதங்களுக்கு (03) அதிக காலத்தையுடைய டிப்ளோமா சான்றிதழ் பத்திரம் (ஒரு சான்றிதழ் பத்திரத்திற்கு 01 புள்ளி என்ற வகையில் அதிக பட்சம் இரண்டு சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.) | 02 | |
| 04. | கணினி அறிவு<br>(தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு) | | 05 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப் படிப்பில் தகவல் தொழில் நுட்பம் அல்லது கணினி விஞ்ஞான பாடத்தை பிரதான பாடமாக கற்றிருத்தல். | 05 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றில் பெற்றுக்கொண்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் பற்றிய டிப்ளோமா. | 04 | |

| *தொ. இல.* | *பாடம் (விடயம்)* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொண்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் பற்றிய அல்லது தகவல் தொழில்நுட்பம் பற்றிய டிப்ளோமா அல்லது வேறு நிறுவனமொன்றில் பெற்றுக்கொண்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் பற்றிய NVQ 05 அல்லது அதற்கு கூடிய டிப்ளோமா. | 03 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு தொழில்சார் நிறுவனமொன்றில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் பாடநெறி பயின்று/ பயிற்சி பட்டறைகளில் கலந்துக்கொண்டு பெற்றுக்கொண்ட சான்றிதழ் பத்திரங்கள் (ஒரு சான்றிதழ் பத்திரத்திற்கு 01 புள்ளி என்ற வகையில் அதிக பட்சம் இரண்டு சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.)<br><br>குறிப்பு : அதிகூடிய தகுதிக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப் படும். | 02 | |
| 05 | **நேர்முக தேர்வுக் குழுவினது மதிப்பீடு**<br><br>I. தலைமைத்துவம்<br>II. தொடர்பாடல் திறன்<br>III. ஆளுமை | <br><br>02<br>02<br>01 | 05 |
| | **மொத்த எண்ணிக்கை** | | 100 |

❖ கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு குழுவிற்காக நேர்முக தேர்வினை நடாத்தும் தினத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் வரவழைக்கப்படுவர்.

**06 விண்ணப்பிக்கும் முறை :**

6.1 இந்த நேர்முக பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவமொன்று இவ் அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப மாத்திரம் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

6.2 விண்ணப்பப்படிவங்கள் 22-29 செ. மீ. அளவிலான A4 கடதாசியில் தயாரிக்கப்படல் வேண்டியதோடு, 1.0 - 3.4 வரையான தலைப்புகள் முதலாவது தாளிலும், மிகுதி இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது தாள்களிலும் உள்ளடக்கப்படும் வகையில் கொண்டு தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்துக் கொள்ளல் வேண்டியதுடன், விண்ணப்பப்படிவங்களை கணினி மூலமாக தயாரித்து, உரிய தகவல்களை தனது கையெழுத்தினால் தெளிவாக கைப்பட எழுதுதல் வேண்டும். இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்திராத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் குறைகளுடனான விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். குறித்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றினை கைவசம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமாக அமையும். மேலும் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் வர்த்தமானி அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததா என விண்ணப்பதாரியால் பரிசோதித்து பார்த்தல் வேண்டுமென்றும், அவ்வாறு அமையாவிடில் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதையும் மேலும் அறிவித்துக்கொள்கின்றேன்.

6.3 விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர், சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

6.4 குறித்த விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுபடுத்தலானது சிரேஷ்ட பிரதி பதிவாளர் நாயகமொருவர் / பிரதி பதிவாளர் நாயகமொருவரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் திணைக்கள தலைவர் ஊடாக சான்றுப்படுத்தி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

6.5 சகல விண்ணப்பதாரிகளும் தமது விண்ணப்பப்படிவங்களை 2025.09.26 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "பதிவாளர் நாயகம், பதிவாளர் நாயகம் திணைக்களம், இலக்கம் 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

6.6 விண்ணப்பப்படிவம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பதிவாளர் சேவையில் வகுப்பு I தரம் III இற்கான திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - 2025" என்று தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

6.7 விண்ணப்பப்படிவத்துடன் எவ்வித கடிதமோ அல்லது கடிதாவணத்தின் பிரதியோ இணைக்கப்படல் கூடாது. அவ்வாறு இருப்பினும், தாம் குறிப்பிடுகின்ற தனது தகுதிகளை உறுதிப்படுத்தும் கடிதாவணங்களை கோரும் போது சமர்ப்பிப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

**கவனத்திற்கொள்க :**

I. நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அழைப்புக் கடிதம் விண்ணப்பதாரியின் பெயருக்கு அலுவலக விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

II. நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதலானது நியமனம் வழங்கப்படுவதற்கான தகுதிகளை பூரணப்படுத்தியதாக கருதப்படமாட்டாது.

III. நியமனமொன்றுக்காக தகுதிபெறுகின்ற விண்ணப்பதாரி ஒருவர் குறித்த நியமனம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் நடைமுறையிலுள்ள பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் படி நியமனத்தைப் பெறத் தகுதி பெற்றில்லையென கருதப்பட்டால் அல்லது திருப்தியற்ற வேலை, நடத்தை காரணமாக அல்லது நியமனத்தை வழங்காதிருக்கும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவைச்சாரும்.

07. **போலியான தகவல்களை வழங்குதல் :**

உங்களால் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் போலியானதென அல்லது தவறானதென ஆட்சேர்ப்புக்கு முன்னர் உறுதியானால் உங்களின் பரீட்சார்த்தத்தன்மை இரத்துச் செய்யப்படும்.

அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்புக்கு பின்னர் தெரியவரின் அதற்குரிய நடவடிக்கைகளுக்கு கீழ்ப்படிந்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சேவையில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

❖ வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாதிருக்கும் உரிமை மற்றும் இவ் அறிவித்தலில் ஏற்பாடு செய்யாதுள்ள விடயமொன்று குறித்து இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழவினால் எடுக்கப்படும்.

08. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள்தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினது கட்டளைப்படி,

எஸ். ஆலோக்கபண்டார,
செயலாளர்.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
2025, ஓகத்து 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் சேவையில் வகுப்பு I தரம் III இற்கு திறமையின் அடிப்படையிலான ஆட்சேர்ப்பு – 2025

[ ]

(அலுவலக உபயோகத்திற்காக மாத்திரம்)

(விண்ணப்பிக்கும் மொழி ஊடகத்திற்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.
சிங்களம் - 2 / தமிழ் - 3) [ ]
குறிப்பு : விண்ணப்பிக்கும் மொழி ஊடகத்தை மாற்றம் செய்ய இயலாது.

---

1.0
- 1.1 முழுப் பெயர் (திரு./ திருமதி / செல்வி) : ..........................................
  (சிங்களத்தில் / தமிழில்) ..........................................
- 1.2 முழுப் பெயர் (திரு./ திருமதி / செல்வி : ..........................................
  (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) ..........................................
- 1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./ திருமதி / செல்வி) : ..........................................
  (சிங்களத்தில் / தமிழில்) ..........................................
  உதா: எம்.ஜீ.பி.எஸ்.கே.குணவர்தன
- 1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................
  (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) ..........................................

2.0
- 2.1 அலுவலக முகவரி :..........................................
  (சிங்களத்தில்/ தமிழில்)
- 2.2 அலுவலக முகவரி :..........................................
  (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

3.0
- 3.1 ஆண் / பெண் தன்மை : ஆண் 0, பெண் 1 [ ] (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)
- 3.2 விவாக நிலை : விவாகமானவர் - 1
  விவாகமாகாதவர் - 2 [ ] (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)
- 3.3 பிறந்த திகதி : ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]
- 3.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | | | ]

4.0
- 4.1 அலுவலக தொலைபேசி இலக்கம் : [ | | | | | | | | | ]
- 4.2 தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் : [ | | | | | | | | | ]

5.0
- 5.1 பதிவாளர் சேவையில் வகுப்பு II இன் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : ..........................................
- 5.2 குறித்த பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்ட திகதி : ..........................................
- 5.3 குறித்த பதவிக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்த திகதி : ..........................................
- 5.4 பதிவாளர் சேவையில் வகுப்பு II இன் பதவியின் 8 வருட சேவைக் காலம் பூர்த்தியாகும் திகதி : ..........................................
- 5.5 சேவைக் காலத்தினுள் ஏதேனும் நடத்தைசார் நடவடிக்கையொன்றிற்கு உட்பட்டுள்ளீர்களா, அவ்வாறு உட்பட்டிருப்பின் அவ்விடயம் குறித்து சுருக்கமாக விபரிக்கவும். ..........................................

6.0 தற்போதைய சேவை நிலையம் : ..........................................

7.0 விண்ணப்பம் கோரல் அறிவித்தலின் இலக்கம் 5 இன் கீழான ஒவ்வொரு தகுதியினையும் பெற்றுக்கொள்வதற்கான விபரங்கள் :

7.1 சேவை அனுபவம் : ..........................................................................................................................................
..........................................................................................................................................

7.2 திறமை : ..........................................................................................................................................
..........................................................................................................................................

7.3 தகவல் தொழில் நுட்பம் பற்றிய அறிவு : ..........................................................................................................................................
..........................................................................................................................................

7.4 மொழித் திறன் : ..........................................................................................................................................
..........................................................................................................................................

- மேலதிக தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களை விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பி வைக்க அவசியமற்றதென்பதோடு, குறித்த ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிப்பதற்கு தயார்படுத்தி வைத்துக்கொள்வது விண்ணப்பதாரரின் கடமையாகும்.

8.0 நீங்கள் எப்போதாவது குற்றச்சாட்டு ஒன்றுக்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?
(ஆம் எனின் விபரத்தை குறிப்பிடவும்)
..........................................................................................................................................

9.0 விண்ணப்பதாரியின் சான்று :

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் எனவும், சகல பிரிவுகளும் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளனவெனவும் என்னால் வழங்கப்படும் இந்த வெளிப்படுத்தல் போலியானது என உறுதியானால் நியமிக்கப்படுவதற்கு முன்னர் தகுதியற்றவன் ஆவேன் எனவும் பதவி கிடைக்கப்பெற்றதன் பின்னர் தெரியவந்தால் சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கு ஆளாக வேண்டும் என்பதையும் அறிவேன் எனவும், சகல சட்டதிட்டங்களுக்கு அடிபணிவேன் எனவும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திகதி : ........................... .................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**குறிப்பு** – சிரேஷ்ட பிரதிப் பதிவாளர் நாயகம் அல்லது பிரதிப் பதிவாளர் நாயகம் முன்னிலையில் விண்ணப்பதாரர் கையொப்பமிடல் வேண்டும்.

10.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுபடுத்தல்

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்ற திரு. /திருமதி/ செல்வி ............................................... என்வரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் ..................... ஆம் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

.........................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரது கையொப்பம்.

முழுப்பெயர் :
பதவி :
முகவரி :
திகதி :
(பதவி முத்திரை இட்டு உறுதிப்படுத்தவும்)

11.0 திணைக்கள தலைவரது சான்று :

மேலே விபரம் குறிப்பிடப்பட்டுள்ள திரு./திருமதி/செல்வி .........................................இந்த திணைக்களத்தில் .......... .......................................................................... பதவியில் கடமையாற்றுவதாகவும், அவர் வழங்கியுள்ள தகவல்கள் சரியானவை என்றும், வேலை மற்றும் வரவு திருப்தியடையகூடியதென்றும், அவருக்கு எதிராக எந்தவித குற்றச்சாட்டும் இல்லையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

...............................................
திணைக்களத் தலைவரது கையொப்பம்.

பெயர் :
பதவி :
முகவரி :
திகதி :
(பதவி முத்திரை இட்டு உறுதிப்படுத்தவும்)

08-326

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

**பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

பதிவாளர் நாயகம் திணைக்களம்

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் சேவையில் வகுப்பு I தரம் III இற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை – 2025

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் சேவையில் வகுப்பு I தரம் III இல் காணப்படுகின்ற 03 வெற்றிடங்களை மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் நிரப்புவதற்காக கீழ்க் குறிப்பிட்டுள்ள தகைமைகளையுடைய 2024.03.17 ஆந் திகதிக்கு முனைப்பான சேவையில் ஈடுபடுகின்ற அலுவலர்களிடமிருந்து மாத்திரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினது ஒழுங்குகளுக்கமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தளத்தின் ‘Our Services’ இன் கீழுள்ள ‘Online Applications – Recruitment Exams/ E.B.Exams’ ஊடாக வெளியிடப்பட்டுள்ளதோடு, நிகழ்நிலை முறைமையில் (Online) மாத்திரமே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலையில் விண்ணப்பப் படிவங்களைப் பொறுப்பேற்றல் 2025, செத்தெம்பர் மாதம் 01 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பமாவதோடு, 2025, செத்தெம்பர் மாதம் 26 ஆம் திகதி இரவு 9.00 மணிக்கு நிறைவடையும். விண்ணப்பப்படிவத்தை நிகழ்நிலையில் அனுப்பியதன் பின்னர் அதனைத் தரவிறக்கம் செய்து அச்சுப் பிரதியில் உரிய பகுதிகளைக் கையெழுத்துக்களால் நிரப்பி விண்ணப்பதாரரது கையொப்பத்தை உறுதிப்படுத்தி உரிய நிறுவனத் தலைவரது உறுதிப்படுத்தலுடன் விண்ணப்பப்படிவங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்துக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

அலுவலர்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தமது தனிநபர் கோவைக்கு உள்ளடக்குவதற்காக நிறுவனத் தலைவர்களுக்கு ஒப்படைக்க வேண்டியதோடு, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றையும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதமொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

01. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை:**

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்து மூல போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகளது அதிக புள்ளித் தொடரொழுங்குக்கமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படும். விண்ணப்பதாரர்களது தகைமைகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபை ஒன்றினால் பரீட்சிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்காகப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

மேலும், 01/2024 இலக்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கமைய திறமை ஒழுங்குக்கு ஏற்ப வெற்றிடங்களை நிரப்பும் போது ஏதேனும் சந்தர்ப்பம் ஒன்றில் மிகுதியாக உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதிகளவான சமமான புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட தகைமையுடைய விண்ணப்பதாரிகள் இருப்பினும் அவ்வெற்றிடங்களையும் நிரப்புவதற்கான சேவைத் தேவைப்பாடொன்று அக்காலப்பகுதியில் நிலவினாலும் அவ்வாறு சம புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளிடையே மேலதிக தெரிவொன்றை மேற்கொள்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்க முடியும். இத்தெரிவு நடைமுறை கீழ்வரும் இரு பகுதிகளாக அமையும்.

I. விண்ணப்பதாரிகளின் இயலுமையை மதிப்பிடுவதற்கான எழுத்து மூலப் பரீட்சை
II. திறமையை அடிப்படையாகக் கொண்ட நேர்முகப் பரீட்சை

02. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

I. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும் தாங்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும்/ தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

II. இப்பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் ஒரு வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவர்.

III. 18/2020 இலக்க 2020.10.16 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையிலும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய, குறிக்கப்பட்ட மற்றைய அரச கரும மொழியில் / அரச கரும மொழிகளில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

IV. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவில் அங்கீகரிக்கப்பட்டுள்ள PSC/EST/2/1/25/1/4/2011 இலக்க 2013.10.22 ஆம் திகதிய பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், குறித்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் அரசாங்க சேவையின் பதவிகளைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினது செயற்பாட்டு நடைமுறைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும் அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டது.

V. பதிவாளர் சேவையில் வகுப்பு I தரம் III இற்கு நியமிக்கப்பட்டு மூன்று வருட (3) காலங்கள் பூர்த்தியாவதற்கு முன்னர் ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கமைய முதலாவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

VI. விண்ணப்பிக்கும் மொழி ஊடகத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதோடு, தாங்கள் நியமனத்தைப் பெறுவதற்குத் தகுதியுடைய மொழி ஊடகமாவது, தங்களால் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழி ஊடகமாகும்.

03. **சம்பள அளவுத்திட்டம் :**

10/2025 இலக்க 2025.03.25 ஆம் திகதிய பொது நிர்வாக சம்பள சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய, இந்நியமனத்துக்கு உரித்தாகும் மாதாந்த சம்பள அளவு ரூ. 82,150.00 -10 x 2,400 - 8 x 2,2,940 - 17 x 3,900 - ரூ. 195,970.00 (SL-1-2025).

04. **தகைமைகள்:**

4.1 **கல்வித் தகைமைகள் :**

ஏற்புடையதன்று.

4.2 **அனுபவம் :**

(அ) பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் சேவையின் வகுப்பு II இல் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்.

(ஆ) பதிவாளர் சேவையின் வகுப்பு II இல் 03 வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல்.

(இ) 01/2020 இலக்க அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை மற்றும் அதன் திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க ஒழுக்காற்றுத் தண்டனை ஒன்றைப் பெறாதிருத்தல் வேண்டும்.

4.3 **உடற்றகைமை :**

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவான உடல் மற்றும் உள ரீதியான தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.4 **ஏனைய தகைமைகள் :**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பம் கோரப்படும் இறுதி திகதிக்கு ஆட்சேர்பபு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் சகல விதத்திலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

4.5 **வயதெல்லை :**

ஏற்புடையதன்று.

05. **எழுத்துப் பரீட்சை :**

5.1 பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேற்றை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சை அபேட்சகர்கள் உட்படுவர். அச்சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுவதற்கு அவருக்கு நேரிடும்.

5.2 பரீட்சையானது மும்மொழிகளிலும் இடம்பெறும். விண்ணப்பிக்கும் மொழி ஊடகத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடம் வழங்கப்படமாட்டாது.

5.3 எழுத்து மூலப் பரீட்சை கீழே குறிப்பிடப்பட்டுள்ள வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும்.

| *வினாப்பத்திரம்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *பெற வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| ஆவணங்களைப் பதிவு செய்தலும் உரித்துகளைப் பதிவு செய்தலும் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| விவாக, பிறப்பு மற்றும் இறப்பு களைப் பதிவு செய்தல் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |

5.4 **பரீட்சைக்காக ஏற்புடையதாகும் விடயச் சிபாரிசு :**

| *வினாப் பத்திரத்தின் பெயர்* | *விடயச் சிபாரிசு* |
|---|---|
| விவாக, பிறப்பு மற்றும் இறப்புகளைப் பதிவு செய்தல் | (அ) ஆவணங்களைப் பதிவு செய்தல் மற்றும் உரித்துகளைப் பதிவு செய்தல் தொடர்பாக பதிவாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட கட்டளைகள்<br>(ஆ) ஆவணங்களைப் பதிவு செய்தல் மற்றும் உரித்துகளைப் பதிவு செய்தல் தொடர்பாக பதிவாளர் நாயகத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக் கைகளும் ஆலோசனைகளும் |
| விவாக, பிறப்பு மற்றும் இறப்புகளைப் பதிவு செய்தல் | (அ) விவாக, பிறப்பு மற்றும் இறப்புகளைப் பதிவு செய்தல் தொடர்பாக பதிவாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட கட்டளைகள்<br>(ஆ) விவாக, பிறப்பு மற்றும் இறப்புகளைப் பதிவு செய்தல் தொடர்பாக பதிவாளர் நாயகத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளும் ஆலோசனைகளும் |

06. **பரீட்சை நிபந்தனைகள் :**

6.1 விண்ணப்பதாரிகள் விரும்புகின்ற ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பதாரிகள் இப்பரீட்சையின் சகல வினாப் பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் பதிலளித்தல் வேண்டும். விண்ணப்பதாரி ஒருவருக்கு தனது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி ஊடகத்தை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

6.2 பரீட்சைக் கட்டணம் ரூ.1200.00 ஆகும். பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும் போது நிகழ்நிலைத் தொகுதியில் வழங்கப்படும் கீழே குறிப்பிடப்பட்டள்ள கட்டணங்கள் செலுத்தும் முறைமைகளின் கீழ் மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கிக் கடனட்டை ஊடாகவும் (Any Bank Credit Card) ;

ii. இணையத்தளக் கொடுப்பனவு வசதிகளையுடைய எந்தவொரு வங்கி டெபிட் அட்டை ஊடாகவும் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions) ;

iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமை (Online Banking Method of Bank of Ceylon) ;

iv. ஏந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் ஊடாகவும் (Any Branch of the Bank of Ceylon).

குறிப்பு :

(அ) மேற்குறித்த முறைகள் ஊடாக கொடுப்பனவு மேற்கொள்ளும் விதம் தொடர்பான ஆலோசனைகள் இணையத்தளத்தின் பரீட்சைக்கு உரிய தொழிநுட்ப ஆலோசனைகள் என்பதன் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கொடுப்பனவு கிடைக்கப் பெற்றமை தொடர்பாக குறுந்தகவல் (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் ஊடாகவோ அறியத்தரப்படும். பரீட்சைக் கட்டணத்துக்கான முழுப்பணத்தையும் செலுத்த வேண்டும் என்பதோடு, பரீட்சைக் கட்டணங்கள் குறைவாகவோ அல்லது மேலதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறித்த கொடுப்பனவு முறைமைகள் ஊடாகப் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும் போது ஏற்படும் தவறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பாகமாட்டாது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணத்தை எக்காரணம் கொண்டும் மீள வழங்கவோ அல்லது வேறு பரீட்சை ஒன்றுக்காக மாற்றவோ முடியாது.

6.3 இப்பரீட்சை 2025, நவெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறியத்தரப்படும்.

6.4 பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

குறிப்பு: அனுமதிப் பத்திரங்கள் இன்றி பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு இடம் வழங்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பிக்கும் திகதியில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தான் கையொப்பமிட்டு உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

6.5 விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்குதல் அவர் பரீட்சைக்கு முன்னிலையாவதற்கான தகைமையைப் பூர்த்தி செய்துள்ளமைக்கான ஏற்றுக்கொள்ளலாகக் கருதப்படலாகாது.

6.6 நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப் படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரியால் நிகழ்நிலை ஊடாக அனுப்பி வைக்கப்பட்ட மென்பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவம் என திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது / ஏற்றுக்கொள்ளப்படவில்லை என தொகுதியை அணுகுவதற்குப் பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசி இலக்கத்துக்கு குறுந்தகவல் (SMS) ஊடாகவோ அல்லது மின்னஞ்சல் முகவரி (E-mail) ஊடாகவோ அறியத்தரப்படும். நிகழ்நிலையில் விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆலோசனைப் பத்திரத்தை (Instructions) தரவிறக்கம் செய்து கொள்க. விண்ணப்பப் படிவத்தை நிரப்பும் போது அவ் ஆலோசனைகளை முறையாகப் பின்பற்றுக. விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியொன்றைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாகக் கருதப்படமாட்டாது. பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6.7 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் ஊகத்தின் அடிப்படையில் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும். பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டவுடன் உடனடியாக அதுபற்றிக் குறிப்பிட்டு இணைய அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் கடந்ததன் பின்னரும் தமது அனுமதிப் பத்திரங்கள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரி ஒருவர் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையில் விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரது முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியைச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளியே வசிப்பாராயின், அவ்விபரங்களுடன் பெக்ஸ் ஊடாக பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை விரைவில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு விண்ணப்பக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்துக்கு அனுப்பி விசாரித்தல் நன்று. அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் விசாரிக்கப்படும் எந்தவொரு தகவலையும் உறுதிப்படுத்துவதற்காக தனது அருகில் விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டு ஆகியவற்றைத் தயாராக வைத்துக்கொள்ளல் பயன்மிக்கதாகும்.

6.8 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதிக்கமைய பரீட்சையினைப் பிற்போடுதல் அல்லது இரத்து செய்வதற்கான அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு உண்டு.

6.9 பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றுகின்ற சகல பாடங்களுக்காகவும் மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையக் கூடியவாறு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக கீழே காட்டப்பட்டுள்ள எந்தவொரு ஆவணமும் பொறுப்பேற்கப்படும் :

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

6.10 மேலும் பரீட்சை விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியவாறு முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்ததிலிருந்து பரீட்சை நிறைவடைந்து வெளியேறும் காலம் வரை முகம் மற்றும் காதுகளை மறைக்காதிருத்தல் வேண்டும்.

**கவனிக்க வேண்டியவை:**

(அ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு அறியத்தரும் சந்தர்ப்பங்களில் குறித்த ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு இயலாது போகும் விண்ணப்பதாரிகளது விண்ணப்பப் படிவங்கள் தொடர்பாக கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

(ஆ) பரீட்சை அனுமதிப்பத்திரம் விண்ணப்பதாரரது பெயரில் அவரது அலுவலக முகவரிக்குப் பதிவு தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

(இ) நியமனத்துக்காகத் தகைமை பெறும் விண்ணப்பதாரி ஒருவர் குறித்த நியமனம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் ஏற்பாடுகளின் கீழ் நியமனத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தகைமை பெறவில்லையெனக் கருதினாலோ அல்லது திருப்தியற்ற வேலை, நடத்தை காரணமாகவோ இந்நியமனத்தை வழங்காதிருக்கும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரியதாகும்.

07. **போலியான தகவல்களை வழங்குதல் :**

தங்களால் அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் போலியானதென அல்லது தவறானதென ஆட்சேர்ப்புக்கு முன்னர் தெரியவரின் தங்களது விண்ணப்பங்கள் இரத்துச் செய்யப்படும்.

அத்தகைய பொய்யான அல்லது தவறான தகவல் ஒன்று ஆட்சேர்ப்பின் பின்னர் தெரியவரின் அதற்குரிய நடவடிக்கைகளுக்கு உட்பட்டு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

❖ யாதேனும் வெற்றிட எண்ணிக்கை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்புதல் அல்லது நிரப்பாதிருத்தல் மற்றும் இவ் ஒழுங்குகளில் குறிப்பிடப்படாத யாதேனும் விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

08. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினது கட்டளைக்கமைவாக,

எஸ். ஆலோக்கபண்டார,
செயலாளர்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

2025, யூலை 31.

08-325

## நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு

## சிறைச்சாலைகள் திணைக்களம்

### சிறைக்காவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2025

இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தில் வெற்றிடமாகக் காணப்படுகின்ற சிறைக்காவலர் (பெண்/ஆண்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- இப்பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவது இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பொலிஸ் மற்றும் ஏனைய காவல் சேவை வகுதிகளைச் சேர்ந்த சிறைக்காவலர் பதவிக்காகும்.

  **கவனத்தில் கொள்ளவும் :** எழுத்து மூலமான பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் இந்த அறிவித்தலின் 12 ஆம் பிரிவின் (1), (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள உடல்சார் தகைமைக்கான பரிசோதனை மற்றும் தகைமையை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றல் வேண்டும். எனவே, குறித்த பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

02. **பரீட்சைத் திகதி மற்றும் பரீட்சையை நடாத்துதல் :**

இப்பரீட்சை 2025 நவம்பர் மாதம் அட்டவணை – 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நாடு முழுவதிலும் அமைந்துள்ள பிரதான நகரங்களில் நடைபெறும். வழங்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்படும் நகரங்களில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரம் மற்றும் இலக்கம் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் நகரத்தை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது. எவ்வாறாயினும், யாதாயினுமொரு நகரத்தில் பரீட்சை நிலையமொன்றை தாபிக்கப் போதியளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திருக்காத சந்தர்ப்பத்தில், விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவத்தில் இரண்டாம் தெரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நகரம் அல்லது அண்மித்த வேறொரு நகரத்தில் தாபிக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அவர்கள் அனுப்பப்படுவார்கள். உத்தேச சகல நகரங்களிலும் அல்லது கூடுதலான நகரங்களில் பரீட்சை நிலையங்களைத் தாபிக்க போதியளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத பட்சத்தில் குறித்த பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்த பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் நடவடிக்கை மேற்கொள்வார்.

**அட்டவணை - 1**

| அட்டவணை இலக்கம் 05 | |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| யாழ்ப்பாணம் | 04 |
| மட்டக்களப்பு | 05 |
| குருநாகல் | 06 |
| அநுராதபுரம் | 07 |
| பதுளை | 08 |
| இரத்தினபுரி | 09 |

03. நியமனம் செய்யப்படும் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 479 ஆகும். (சிறைக்காவலர் (ஆண்) – 409, சிறைக்காவலர் (பெண்) – 70) இறுதி வெற்றிடத்திற்கு அல்லது ஒரு சில வெற்றிடங்களுக்கு சமமான புள்ளிகளை பெற்றுக் கொண்டுள்ள பரீட்சார்த்திகள் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விஞ்சி இருக்கின்ற சந்தர்ப்பத்தில் அந்த வெற்றிடங்களின் எண்ணிக்கையை நிரப்புவது தொடர்பாக நடைமுறை விதிகள் கோவையின் 92 ஆவது பிரிவுக்கு அமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைய தீர்மானிக்கப்படும். நியமனத்தை அமுல்படுத்தும் திகதி சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

04. **சேவை நிபந்தனைகள் :**

4.1 அரசாங்க சேவையின் நியமனங்களை கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கும், 2310/29 ஆம் இலக்க மற்றும் 2022.12.14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் உட்பட்டு பரீட்சார்த்தி ஒருவர் குறித்த பதவியில் சிறைக்காவலர் பதவிக்கு நியமனம் செய்யப்படுவார்.

4.2 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். உங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கம் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், நீங்கள் விதவை, அநாதை ஓய்வூதியத்திட்டத்திற்கு /தபுதாரர் அநாதை ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படுகின்றவாறு நீங்கள் அதற்கான பங்களிப்புத் தொகைகளைச் செலுத்தல் வேண்டும்.

4.3 இந்நியமனம் 03 வருட தகுதிகாண்நிலை காலத்திற்கு உட்பட்டதாகும். சிறைக்காவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருட காலப்பகுதிக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

4.4 அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இற்கமைய மற்றும் அதற்கான விளைவாய்ந்தன்மைவாய்ந்த சுற்றறிக்கைகளுக்கமைய உரிய அரசகரும மொழித் தேர்ச்சியை பூர்த்தி செய்துகொள்ளல் வேண்டும்.

4.5 தமக்கு பொறுப்பளிக்கப்படுகின்ற பதவியின் கடமைகளை குறித்த திகதியில் பொறுப்பேற்றுக் கொள்ளத் தவறும் மற்றும் / அல்லது நியமனம் செய்யப்பட்டதொரு பதவியில் அல்லது நியமனம் செய்யப்பட்ட பிரதேசமொன்றில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொள்ள நிராகரிக்கின்ற விண்ணப்பதாரிகளின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு. சிறைக்காவலர் பதவிக்கு நியமனம் பெறுபவர்கள் நியமனம் பெற்று முதல் 05 வருட காலப்பகுதியில் நிரந்த வசிப்பிடப் பிரதேசத்திற்கு வெளியே சிறைச்சாலைகளில் திருமணமாகாதவர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களில் தங்கியிருந்து சேவையாற்றுவதற்கு இணங்குதல் வேண்டும்.

05. **சம்பள அளவுத்திட்டம் :**

இப்பதவிக்கு, அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இற்கு அமைவாக RS – 1-2025 (1 ஆம் சம்பள படிநிலை) சம்பள வகுதி உரித்தாகும். மேற்படி சம்பள வகுதிக்கு உரித்தான சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறாகும்.

ரூபா 49,550- – 7 x 540 – 27 x 670 – ரூபா 71,420.00 (மாதாந்தம்)

(2025.03.25 ஆம் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் ஏற்பாடுகளுக்கு அமைய அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ரூபா 49,550 இற்கு இசைவான ஆரம்ப சம்பள படிநிலையில் வைத்து சம்பளம் செலுத்தப்படும்.)

06. **ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் :**

(அ)

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பதாரி சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராகவும், சிறந்த நன்னடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும். இதனை பொலிஸ் விடுவிப்பு அறிக்கை மூலம் உறுதி செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
(iii) நற்பெயர் சம்பந்தமான குற்றம் தொடர்பில் ஏதேனுமொரு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்படுவது மேற்படி பதவிக்கு நியமனம் பெறுவதற்கு பூரணமான தகுதி இன்மையாக இருக்கும்.
(iv) ஆகக் குறைந்த உயரம் 5 அடி 4 அங்குலம் (ஆண்)
(v) ஆகக் குறைந்த உயரம் 5 அடி 2 அங்குலம் (பெண்)
(vi) நெஞ்சு மூச்சு உள்வாங்காத நிலையில் 32 அங்குலத்திற்குக் குறையாதவறாக இருத்தல் வேண்டும். (பெண்களுக்கு ஏற்புடையதன்று)
(vii) விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துச் செய்தவர்கள் மற்றும் விதவைகள் இதன் போது விவாகமானவர்களாகக் கருதப்படுவார்கள்.)

(ஆ) **கல்வித் தகைமைகள் :**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மற்றும் கணிதம் உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் ஏதேனும் இரண்டு (02) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன், இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் சித்தியடைந்திருத்தல்.

(இ) **வயது:**

- 18 வயதுக்குக் குறையாதவராகவும், 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
  (அதற்கமைய, 2007.09.19 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1995.09.19 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னரான பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்க தகைமை பெறுவார்கள்.)

(ஈ) **தகைமைகள் தொடர்பான வரையறைகள் :**

I. இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

II. மேற்படி 06 (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் வரை செல்லுபடியாகும்.

III. உடலில் பச்சை குத்துதல் (Tattoos) போன்ற உடல் மாற்றங்கள் மற்றும் உடல் குறைபாடுகள் தகுதியின்மைக்குக் காரணமாகும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

07. **விண்ணப்பிக்கும் முறை :**

7.1 பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது இணையவழி முறையில் வழங்கப்படும் பின்வரும் கட்டணங்கள் செலுத்தும் முறையின் கீழ் மட்டும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கியின் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)

ii. இணையவழி கொடுப்பனவு வசதிகளுடன் கூடிய எதேனுமொரு வங்கியின் பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

iii. இலங்கை வங்கியின் இணையவழி வங்கிச் சேவை மூலம் (Online Banking Method of Bank of Ceylon)

iv. இலங்கை வங்கியின் ஏதேனும் ஒரு கிளை மூலம் (Any Branch of the Bank of Ceylon)

**கவனத்திற்கு:**

(அ) மேற்கண்ட முறைகள் மூலம் பணம் செலுத்துவது தொடர்பான வழிமுறைகள் இணையதளத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப வழிமுறைகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) பணம் செலுத்தப்பட்டமை தொடர்பாக குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையும் செலுத்தப்படுதல் வேண்டும். என்பதுடன், பரீட்சைக் கட்டணத்தை குறைவாகவோ அதிகமாகவோ செலுத்திய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிட்ட கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது ஏற்படும் குறைப்பாடுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக் கூறாது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் திருப்பிச் செலுத்தப் படவோ வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

7.2 விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.donets.lk என்ற இணையத்தளத்தில் "Our Service" இன் கீழ் உள்ள "Online Applications – Recruitment Exams/E.B. Exams" மூலம் வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்கள் இணையவழியில் (Online) மாத்திரமே சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இணையவழி விண்ணப்பங்கள் 2025, செத்தெம்பர் மாதம் 01 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு, 2025, செத்தெம்பர் 19 ஆம் திகதி பி.ப. 09.00 மணிக்கு நிறைவடையும்.

7.3 தற்போது அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்கள் விண்ணப்பப்படிவத்தின் ஒரு பிரதியை தமது சுயவிபரக் கோப்பில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் போது, நிறுவனத் தலைவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் ஒரு பிரதியையும், சேவை உறுதிப்படுத்தல் கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

7.4 விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதை இறுதி திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் எந்தவொரு பாதகமான சூழ்நிலையையும் விண்ணப்பதாரரே தாங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

7.5 இணையவழி (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரரால் இணையவழியில் சமர்ப்பிக்கப்பட்ட மென்பதிவு செல்லுபடியான விண்ணப்பமாக திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா / ஏற்றுக்கொள்ளப்படவில்லையா என்பது குறித்து, கணினி அமைப்பிற்குள் நுழைய பயன்படுத்தப்பட்ட கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ மின்னஞ்சல் (E-mail) முகவரி மூலமாகவோ அறிவிக்கப்படும். இணையவழி விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தை (Instructions) பதிவிறக்கம் செய்யவும். விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் போது அந்த அறிவுறுத்தல்களை கண்டிப்பாகப் பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அதில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமாக கருதப்படமாட்டாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் எந்த அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும்.

7.6 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியுடையவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்முடிவின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி அல்லது அதற்கு முன்னர், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டுடன் (Receipt) சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் இணையவழியில் மாத்திரமே வெளியிடப்படும். பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் வெளியிடப்பட்டவுடன், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் அது குறித்து இணைய அறிவித்தல் மூலம்/ விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படும். தமது அனுமதிப்பத்திரத்தைப் பெறாத விண்ணப்பதாரர் இருந்தால், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளபடி அது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்புப் பிரிவில் விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றை சரியாகக் குறிப்பிட்டு, அறிவித்தலில் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கை கடிதத்தை அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது, பரீட்சைத் திணைக்களம் கேட்கும் எந்தவொரு தகவலையும் உறுதிப்படுத்துவதற்கு, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும். அனுமதிப்பத்திரத்தை சரிபார்த்து திருத்தங்கள் இருந்தால், காலதாமதமின்றி பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு, விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப உரிய திருத்தங்களைச் செய்துகொள்ளுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் / நேர்முகப் பரீட்சையின் போது திருத்தங்களுக்காக செய்யப்படும் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7.7 பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமும் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும். எந்தவொரு அரசாங்க நிறுவனத்திலிருந்தும் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர், தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் கையளிக்கப்பட்ட அலுவலரால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு அல்லாத விண்ணப்பதாரர், தனது கையொப்பத்தை பிரிவின் கிராம அலுவலர், அரசாங்க பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது நாயக்க தேரர் அல்லது வேறொரு மத வழிபாட்டுத் தலத்தின் பொறுப்பாளர் அல்லது மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க அந்தஸ்து உள்ள ஒருவர் மூலம் அத்தாட்சிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

08. **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(அ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொண்டு முதல் தடவை குறித்த பரீட்சை மண்டபத்திற்கு வருகைதரும் தினத்தில், அதனை பரீட்சை மண்டப பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். அனுமதி அட்டவணை இன்றி பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை இந்த வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சையை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சைகள்

ஆணையாளர் நாயகத்தினால் ஆக்கப்படுகின்ற சட்டங்களுக்கும் விதிகளுக்கும் பரீடசார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். மேற்படி சட்டங்கள், விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கும் அவர் உட்பட நேரிடும்.

(ஆ) விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவிக்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளமைக்கான ஏற்றுக்கொள்ளுதலாக கவனத்தில் கொள்ளுதலாகாது.

09. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப பொறுப்பாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். அதற்காக பின்வரும் யாதாயினுமொரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும் :

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியான கடவுச்சீட்டு ;
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும், பரீட்சார்திகள் தமது ஆள்அடையாளத்தை உறுதி செய்துகொள்ளக்கூடிய வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்வதை நிராகரிக்கும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த சந்தர்ப்பம் முதல் பரீட்சை நிறைவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் பரீட்சார்த்திகளை இனங்காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காது இருத்தல் வேண்டும்.

10. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை:**

விண்ணபப்படிவங்களை நிரப்பும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இந்தப் பரீட்சையின் சட்டங்கள், விதிகளுக்கு அமைய யாராயினும் அபேட்சகர் ஒருவர் தகுதியற்றவர் என்பது வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் அபேட்சகர் அந்தஸ்து இரத்துச் செய்யப்பட முடியும். விண்ணபதாரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதெனுமொரு விடயம் உண்மைக்கு முரணானது என்பதை அறிந்துகொண்டே சமர்ப்பித்துள்ளமை தெரியவரும் பட்சத்தில் அல்லது யாதாயினுமொரு முக்கியமான விடயம் அவரினால் வேண்டுமென்றே மறைக்கப்பட்டிருப்பின் அவரின் நியமனத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11. **பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழி மூலம் :**

(அ) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.
(ஆ) தமது விண்ணபப்படிவத்தில் குறிப்பிடும் பரீட்சைக்கான மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

12. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

(1) **எழுத்து மூலமான பரீட்சை** :

இந்த அறிவித்தலின் 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களை உள்ளடக்கிய 02 வினாத்தாள்களைக் கொண்டதாக எழுத்து மூலம் பரீட்சை நடைபெறும். ஒவ்வொரு பாடத்திலும் சித்தி பெறுவதற்கு ஆகக் குறைந்தது 40% ஆன புள்ளிகள் வீதம் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

பாடங்கள் : 1. பொது நுண்ணறிவு
2. பொது அறிவு

- **எழுத்து மூலமான பரீட்சைக்கான பாடவிதானம் :**

(அ) **பொது நுண்ணறிவு –** நேரம் 01 மணித்தியாலம். மொத்த புள்ளிகளின் எண்ணிக்கை 100 ஆகும். எண்ணியல், மொழியியல் மற்றும் உருவக கட்டமைப்புக்கள் சார்ந்ததாக தர்க்க ரீதியாக சிந்தித்தல், பகுப்பாய்வுசார் சிந்தனை ஆற்றல், தீர்மானம் மேற்கொள்ளும் திறமையை கணிப்பிடுவதற்காக தயார் செய்யப்பட்ட 50 வினாக்களைக் கொண்ட பல்தேர்வு வினாத்தாள் ஆகும்.

(ஆ) **பொது அறிவு –** நேரம் 01 மணித்தியாலம். மொத்த புள்ளிகளின் எண்ணிக்கை 100 ஆகும். இலங்கையின் அரசியல், கலாசார மற்றும் பொருளாதார சூழல் சார்ந்ததாக முக்கியத்துவம்மிக்க விடயங்களை உள்ளடக்கிய அறிவை பரிசோதிப்பதற்காக தயார் செய்யப்பட்ட 50 வினாக்களைக் கொண்ட பல்தேர்வு வினாப்பத்திரமாகும்.

(2) **உடல்சார் தகுதிக்கான பரிசோதனை :**

காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இரண்டு மடங்கு எண்ணிக்கையானோர் எழுத்து மூலமான பரீட்சையில் உச்ச அளவான புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரிகளின் பெயர்களின் அகர ஒழுங்குவரிசையில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொண்டு, குறித்த விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் உடல்சார் பரிசோதனை எனும் தாக்குப்பிடிக்கும் ஆற்றல் பற்றிய பரிசோதனை நடாத்தப்படும். மேற்படி பரிசோதனை நடைபெறும் திகதி சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

ஆண் - 1000 மீற்றர் (1 கிலோமீற்றர்) 03 நிமிடம் 44 செக்கன் நேரத்திற்குள் ஓடுதல்.

பெண் - 400 மீற்றர் (0.4 கிலோமீற்றர்) 02 நிமிடம் 05 செக்கன் நேரத்திற்குள் ஓடுதல்.

உடல்சார் தகைமைக்கான பரிசோதனைக் குழு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் நியமனம் செய்யப்படும்.

(3) **தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை :**

(i) மேலே இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பது மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பற்றிய வரையறைகளுக்கு உட்படுகின்றாரா என்பதை பரிசீலித்துப் பார்ப்பதற்காக தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(ii) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான தலைப்புக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள உச்சளவான புள்ளிகளின் எண்ணிக்கைக்குள், புள்ளி வழங்க நேர்முகப் பரீட்சைக் குழு நடவடிக்கை மேற்கொள்ளும்.

| *புள்ளி வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்* | *உச்சளவான புள்ளிகளின் எண்ணிக்கை* | *தெரிவு செய்துகொள்ள கவனத்தில் கொள்ளப்படும் ஆகக் குறைந்த புள்ளிகளின் எண்ணிக்கை* |
|---|---|---|
| மேலதிகக் கல்விசார் மற்றும் வேறு தகைமைகள் | 25 | ஏற்புடையதன்று. |
| தொழில்சார் தகைமைகள் | 15 | |
| விளையாட்டுத் திறமைகள் | 30 | |
| தலைமைத்துவம் மற்றும் சமுதாய சேவைகள் | 25 | |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்திய திறமை | 05 | |
| **மொத்தம்** | **100** | |

(iii) உடல்சார் தகைமைப் பரிசோதனை எனும் தாக்குப் பிடிக்கும் ஆற்றல் பற்றிய பரிசோதனையில் சித்தியடையும் பரீட்சார்த்திகள் மாத்திரம் தகைமைகளை மதிப்பீடு செய்யும் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அடிப்படைத் தகைமைகள், தகைமைகளைப் பரிசோதிக்கும் நேர்முகப் பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும். (எழுத்துமூலமான பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்றுக் கொண்ட புள்ளிகள் இந்த சந்தர்ப்பத்தில் அழைக்கப்படுவதில்லை.)

(iv) தகைமைகளை பரிசோதிக்கும் நேர்முகப் பரீட்சையின் போது ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பெற்றுக் கொண்ட புள்ளிகள் மீண்டும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் குறித்த அபேட்சகர்கள் எழுத்து மூலமான பரீட்சையில் மற்றும் தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட ஒட்டுமொத்த புள்ளிகளின் கூட்டுத்தொகையின் ஒழுங்குவரிசையின் அடிப்படையில் உச்ச அளவான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள பரீட்சார்திகள் சிறைக்காவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

(v) பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட வகையில் பெறுபேறுகளை அறிவித்தல் அல்லது www.results.exams.lk இணையதளத்தில் வெளியிடல் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் அறிவிப்புக்கமைவாக மேற்கொள்ளப்படும்.

குறிப்பு : நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது நியமனம் வழங்குவதற்கான தகைமைகளை பூர்த்தி செய்வதாகக் கருதப்பட மாட்டாது.

- ❖ யாதாயினும் எண்ணிக்கையிலான வெற்றிடங்களை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாதிருப்பதற்கு நியமன அதிகாரிக்கு தத்துவமுண்டு.
- ❖ இதில் குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் இருப்பின், அது பற்றி சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தீர்மானம் மேற்கொள்வார். சகல விண்ணப்பதாரிகளும் இந்த வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை சட்டங்கள், விதிகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்வதற்குக் கட்டுப்பட்டுள்ளார்கள்.
- ❖ இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான உரைகளுக்கு இடையே ஏதேனும் இணங்காமை அல்லது ஒவ்வாமை எழும் பட்சத்தில், சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானதெனக் கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

எச்.எம்.என்.சீ. தனசிங்க,
சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் (ப.க).

சிறைச்சாலைகள் தலைமையகம்,
இலக்கம் 150,
பேஸ்லையின் வீதி,
கொழும்பு 09,
2025, ஓகத்து 22.

08-340

## நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுஅமைச்சு

## சிறைச்சாலைகள் திணைக்களம்

### இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் II ஆம் தர ஜெயிலர் மற்றும் II ஆம் தர நலன்புரி அலுவலர்களை

### ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை –2025

இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தில் வெற்றிடமாகக் காணப்படுகின்ற II ஆம் தர ஜெயிலர் (பெண்/ஆண்) மற்றும் II ஆம் தர நலன்புரி அலுவலர் (பெண்/ஆண்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

I. இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தால் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவது II ஆம் தர ஜெயிலர் (பெண்/ஆண்) மற்றும் II ஆம் தர நலன்புரி அலுவலர் (பெண்/ஆண்) பதவிகளுக்கு ஆகும்.

II. எழுத்து மூலமான பரீட்சை : இப்பரீட்சை பின்வரும் 02 வினாத்தாள்களைக் கொண்டதாக இருக்கும்.

   I. நுண்ணறிவுப் பரீட்சை
   II. எண்ணியல் ஆற்றல்

02. **பரீட்சைத் திகதி மற்றும் பரீட்சையை நடாத்தல் :**

இப்பரீட்சை 2025 நவெம்பர் மாதம் அட்டவணை – 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நாடு முழுவதிலும் அமைந்துள்ள பிரதான நகரங்களில் நடைபெறும். வழங்கியுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரம் மற்றும் இலக்கம் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் நகரத்தை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. எவ்வாறாயினும், யாதாயினுமொரு நகரத்தில் பரீட்சை நிலையமொன்றை தாபிக்கப் போதியளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திருக்காத சந்தர்ப்பத்தில், விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவத்தில் இரண்டாம் தெரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நகரம் அல்லது அண்மித்த வேறொரு நகரத்தில் தாபிக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அவர்கள் அனுப்பப்படுவார்கள். உத்தேச சகல நகரங்களில் அல்லது கூடுதலான நகரங்களில் பரீட்சை நிலையங்களைத் தாபிக்க போதியளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத பட்சத்தில் குறித்த பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்த பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் நடவடிக்கை மேற்கொள்வார்.

**அட்டவணை - 1**

| பிரதான நகரங்கள் மற்றும் இலக்கங்கள் | |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| யாழ்ப்பாணம் | 04 |
| மட்டக்களப்பு | 05 |
| குருநாகல் | 06 |
| அநுராதபுரம் | 07 |
| பதுளை | 08 |
| இரத்தினபுரி | 09 |

03. நியமனம் செய்யப்படும் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 75 ஆகும். (II-ஆம் தர ஜெயிலர் (ஆண்) –55, (II-ஆம் தர ஜெயிலர் (பெண்) –07,II ஆம் தர நலன்புரி அலுவலர் (ஆண்)– 10, II ஆம் தர நலன்புரி அலுவலர் (பெண்) – 3 ஆகும். இறுதி வெற்றிடத்திற்கு அல்லது ஒரு சில வெற்றிடங்களுக்கு சமமான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள பரீட்சார்த்திகள் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விஞ்சி இருக்கின்ற சந்தர்ப்பத்தில் மேற்படி வெற்றிடங்களின் எண்ணிக்கையை நிரப்புவது தொடர்பான நடைமுறை விதிகள் கோவையின் 92 ஆவது பிரிவுக்கு அமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைவாக தீர்மானிக்கப்படும். நியமனத்தை அமுல்படுத்தும் திகதி சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

04. **சேவை நிபந்தனைகள்:**

4.1 அரசாங்க சேவையின் நியமனங்களை கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கும்,2310/29 ஆம் இலக்க 2022.12.14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் உட்பட்டு பரீட்சார்த்தி ஒருவர் மேற்படி பதவியின் II ஆம் தர ஜெயிலர்/ II ஆம் தர நலன்புரி பதவிக்கு நியமனம் செய்யப்படுவார்.

4.2 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும்.உங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கம் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு / தபுதாரர்கள் அநாதைகள ஓய்வூதியத்திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அடிக்கடி நிர்ணயிக்கப்படுகின்றவாறு நீங்கள் அதற்கான பங்களிப்புத் தொகைகளைச் செலுத்தல் வேண்டும்.

4.3 இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். II ஆம் தர ஜெயிலர்/ II ஆம் தர நலன்புரி அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருட காலப்பகுதிக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலும்,பதவிக்கு நியமனம் பெற்று 07 வருட காலப் பகுதிக்குள் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

4.4 அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம்18/2020 இற்கமைய மற்றும் அதற்கான விளைவாய்ந்தன்மைவாய்ந்த சுற்றறிக்கைகளுக்கமைய உரிய அரசகரும மொழித் தேர்ச்சியை பூர்த்தி செய்துகொள்ளல் வேண்டும்.

4.5 தமக்கு பொறுப்பளிக்கப்படுகின்ற பதவியின் கடமைகளை குறித்த திகதியில் பொறுப்பேற்றுக் கொள்ளத் தவறும் மற்றும்/ அல்லது நியமனம் செய்யப்பட்டதொரு பதவியில் அல்லது நியமனம் செய்யப்பட்ட பிரதேசமொன்றில் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொள்ள நிராகரிக்கின்ற விண்ணப்பதாரிகளின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு. II ஆம் தர ஜெயிலர்/ II ஆம் தர நலன்புரி அலுவலர் பதவிக்காக நியமனம் பெறுபவர்கள் நியமனம் பெற்று முதல் 05 வருட காலப்பகுதியில் நிரந்தர வசிப்பிடப் பிரதேசத்திற்கு வெளியே சிறைச்சாலைகளில் சேவையாற்றுவதற்கு இணங்குதல் வேண்டும்.

05. **சம்பள அளவுத்திட்டம் :**

இப்பதவிக்கு, அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 சம்பளச் சுற்றறிக்கைக்கு அமைய RS – 3/2025 (1 ஆம் சம்பள படிநிலை) சம்பளத் தொகுதி உரித்தாகும். மேற்படி சம்பளத் தொகுதிக்கு உரித்தான சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறாகும் :

ரூபா 55,410.00-7x670-2x890-25x1190-91,630.00 (மாதாந்தம்)

(2025.03.25 ஆம் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் ஏற்பாடுகளுக்கு அமைய அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ரூபா 55,410.00 இற்கு இசைவான ஆரம்ப சம்பள படிநிலையில் வைத்து சம்பளம் செலுத்தப்படும்.)

06. **ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் :**

(அ)

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டுமென்பதுடன், இதனை பொலிஸ் விடுவிப்பு அறிக்கை மூலம் உறுதி செய்துகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(iii) நாட்டில் எந்தவொரு பிரதேசத்தில் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும், போதுமான உடல் மற்றும் உள தகுதியுள்ள திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். (விவாகரத்துச் செய்தவர்கள் மற்றும் விதவைகள் விண்ணப்பம் செய்வதற்கு தகைமை பெறமாட்டார்கள்.)

(iv) ஆண் - ஆகக் குறைந்த உயரம் 5 அடி 6 அங்குலம் ஆதல் வேண்டும்.

பெண் - ஆகக் குறைந்த உயரம் 5 அடி 4 அங்குலம் ஆதல் வேண்டும்.

(v) நெஞ்சு மூச்சு உள்வாங்காத நிலையில் 32 அங்குலத்திற்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும். (பெண்களுக்கு ஏற்புடையதன்று)

(vi) எல்லா பரீட்சார்திகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்தில் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும், போதுமான உடல் மற்றும் உள தகுதி இருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வித் தகைமைகள் :**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கில மொழி உள்ளடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன்,ஆறு (06) பாடங்களை ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் (பொது பரீட்சை தவிர்ந்த) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பழைய பாடதிட்டத்தின் கீழ் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்போதுமானதாகும்.)

(இ) **வயது:**

I. II ஆம் தர ஜெயிலர்; வகுதியின் - 18 வயதுக்குக் குறையாதவராகவும், 26 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(அதற்கமைய, 2007.09.19 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1999.09.19 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னரான பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்கத் தகைமை பெறுவார்கள்.)

II. II ஆம் தர நலன்புரி அலுவலர் - 18 வயதுக்குக் குறையாதவராகவும், 26 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(அதற்கமைய, 2007.09.19 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1999.09.19 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னரான பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்க தகைமை பெறுவார்கள்.)

(ஈ) **தகைமைகள் தொடர்பான வரையறைகள் :**

I. சமயத் துறவறத்தில் உள்ள எவருக்கும் விண்ணப்பிக்கவோ அல்லது தோன்றுவதற்கோ அனுமதி இல்லை.

II. இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

III. II ஆம் தர ஜெயிலர்/II ஆம் தர நலன்புரி அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் வரை, மேற்படி 06(அ)-இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் செல்லுபடியாகும்.

IV. உடலில் பச்சை குத்துதல் (Tattoos) போன்ற உடல் மாற்றங்கள் மற்றும் உடல் குறைபாடுகள் தகுதியின்மைக்குக் காரணமாகும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

07. **பரீட்சைக் கட்டணம்** :

பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது இணையவழி முறையில் வழங்கப்படும் பின்வரும் கட்டணங்கள் செலுத்தும் முறையின்கீழ் மட்டும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும் :

i. எந்தவொரு வங்கியின் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card) ;
ii. இணையவழி கொடுப்பனவு வசதிகளுடன் கூடிய ஏதேனுமொரு வங்கியின் பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions) ;
iii. இலங்கை வங்கியின் இணையவழி வங்கிச் சேவை மூலம் (Online Banking Method of Bank of Ceylon) ;
iv. இலங்கை வங்கியின் ஏதேனும் ஒரு கிளை மூலம் (Any Branch of the Bank of Ceylon).

**கவனத்திற்கு:**

(அ) மேற்கண்ட முறைகள் மூலம் பணம் செலுத்துவது தொடர்பான வழிமுறைகள் இணையதளத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப வழிமுறைகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) பணம் செலுத்தப்பட்டமை தொடர்பாக குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையும் செலுத்தப்படுதல் வேண்டும். என்பதுடன், பரீட்சைக் கட்டணத்தை குறைவாகவோ அதிகமாகவோ செலுத்திய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிட்ட கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது ஏற்படும் குறைபாடுகள் தொடர்பில் இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக் கூறாது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் திருப்பிச் செலுத்தப்படவோ வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

08. **விண்ணப்பிக்கும் முறை**:

8.1 விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.donets.lk என்ற இணையத்தளத்தில் "Our Service" இன் கீழ் உள்ள "Online Applications – Recruitment Exams/E.B. Exams" மூலம் வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்கள் இணையவழியில் (Online) மாத்திரமே சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இணையவழி விண்ணப்பங்கள் 2025, செத்தெம்பர் மாதம் 01 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு, 2025, செத்தெம்பர் 19 ஆம் திகதி பி.ப. 09.00 மணிக்கு நிறைவடையும்.

8.2 தற்போது அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்கள் விண்ணப்பப்படிவத்தின் ஒரு பிரதியை தமது சுயவிபரக் கோப்பில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் போது, நிறுவனத் தலைவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் ஒரு பிரதியையும், சேவை உறுதிப்படுத்தல் கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

8.3 விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் எந்தவொரு பாதகமான சூழ்நிலையையும் விண்ணப்பதாரரே தாங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

8.4 இணையவழி (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். விண்ணபதாரரால் இணையவழியில் சமர்ப்பிக்கப்பட்ட மென்பதிவு செல்லுபடியான விண்ணப்பமாக திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா / ஏற்றுக்கொள்ளப்படவில்லையா என்பது குறித்து, கணினி அமைப்பிற்குள் நுழைய பயன்படுத்தப்பட்ட கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ மின்னஞ்சல் (E-mail) முகவரிக்குவோ அறிவிக்கப்படும். இணையவழி விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தை (Instructions) பதிவிறக்கம் செய்யவும். விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் போது அந்த அறிவுறுத்தல்களை கண்டிப்பாகப் பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அதில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமாக கருதப்படமாட்டாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் எந்த அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும்.

8.5 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியுடையவர்கள் மட்டுமே விண்ணபித்துள்ளனர் என்ற முன்முடிவின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டுடன் (Receipt) சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் இணையவழியில் மாத்திரமே வெளியிடப்படும். பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் வெளியிடப்பட்டவுடன், இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் அது குறித்து இணைய அறிவித்தல் மூலம்/ விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படும். தமது அனுமதிப்பத்திரத்தைப் பெறாத விண்ணப்பதாரர் இருந்தால், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளபடி அது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்புப் பிரிவில் விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது, விண்ணப்பதாரர் தான் விண்ணபித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றை சரியாகக் குறிப்பிட்டு, அறிவித்தலில் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கைக் கடிதத்தை அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது, பரீட்சைத் திணைக்களம் கேட்கும் எந்தவொரு தகவலையும் உறுதிப்படுத்துவதற்கு, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும். அனுமதிப்பத்திரத்தை சரிபார்த்து திருத்தங்கள் இருந்தால், காலதாமதமின்றி பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு, விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப உரிய திருத்தங்களைச் செய்துகொள்ளுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் / நேர்முகப் பரீட்சையின் போது திருத்தங்களுக்காக செய்யப்படும் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8.6 பரீட்சைக்கானஅனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுப்படுத்தியிருத்தல் வேண்டும். அரசாங்க நிறுவனமொன்றில் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பத்தாரி தமது கையொப்பத்தை நிறுவன தலைவர் அல்லது அவரால் அதிகாரம் கையளிக்கப்பட்ட அலுவலரைக் கொண்டும், அவ்வாறு அல்லாத விண்ணப்பத்தாரி ஒருவர் தமது கையொப்பத்தை பிரிவின் கிராம அலுவலர்,அரசாங்க பாடசாலை அதிபர் ஒருவர், சமாதான நீதவான் ஒருவர், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர், சட்டத்தரணி ஒருவர், பகிரங்க நொத்தாரிசு ஒருவர்,அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது நாயக்க தேரர் ஒருவர் அல்லது வேறொரு சமய வழிபாட்டு இடத்திற்குப் பொறுப்பான அல்லது மதகுருமார்களின் கவனிக்கத்தக்க நிலையை வகிக்கின்ற அலுவலர் ஒருவரைக் கொண்டு சான்றுப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

09. **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(அ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொண்டு முதல் தடவை குறித்த பரீட்சை மண்டபத்திற்கு வருகைதரும் தினத்தில், அதன் பரீட்சை மண்டப பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். அனுமதி அட்டவணை இன்றி பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை இந்த வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சையை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் ஆக்கப்படுகின்ற சட்டங்களுக்கும்விதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்படுவார்கள். மேற்படி சட்டங்கள், விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கும் அவர் உட்பட நேரிடும்.

(ஆ) விண்ணப்பத்தாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதலானது, அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது பதவிக்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளமைக்கான ஏற்றுக்கொள்ளுதலாக கவனத்தில் கொள்ளுதலாகாது.

10. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப பொறுப்பாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். அதற்காக பின்வரும் யாதாயினுமொரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும் :

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு ;
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும்,பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை உறுதி செய்துகொள்ளக்கூடிய வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதை நிராகரிக்கும் பரீட்சார்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த சந்தர்ப்பம் முதல் பரீட்சை நிறைவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் பரீட்சார்த்திகளை இனங்காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காது இருத்தல் வேண்டும்.

11. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை:**

விண்ணப்பப்படிவங்களை நிரப்பும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இந்தப் பரீட்சையின் சட்டங்கள், விதிகளுக்கு அமைய யாராயினும் பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவர் என்பது வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்பட முடியும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் உண்மைக்கு முரணானது என்பதை அறிந்துகொண்டே சமர்ப்பித்துள்ளமை தெரியவரும் பட்சத்தில், அல்லது யாதாயினுமொரு முக்கியமான விடயம் அவரினால் வேண்டுமென்றே மறைக்கப்பட்டிருப்பின் அவரின் நியமனத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. **பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழி மூலம் :**

(அ) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.
(ஆ) தமது விண்ணபப்பப்படிவத்தில் குறிப்பிடும் பரீட்சைக்கான மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

13. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

(1) **எழுத்து மூலமான பரீட்சை :**

இந்த அறிவித்தலின் 01 ஆம் பந்தியில் II ஆவது விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களை உள்ளடக்கிய 02 வினாத்தாள்களைக் கொண்டதாக எழுத்து மூலப் பரீட்சை நடைபெறும். ஒவ்வொருபாடத்திலும் சித்தி பெறுவதற்கு ஆகக் குறைந்தது 40% ஆன புள்ளிகள் வீதம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். பரீட்சார்த்திகள் அனைத்து வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

பாடங்கள் : 1. நுண்ணறிவுப் பரீட்சை
2. எண்ணியல் கணிதம்

• **எழுத்து மூலமான பரீட்சைக்கான பாடவிதானம் :**

(அ) நுண்ணறிவுப் பரீட்சை– நேரம் 01 மணித்தியாலம். மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை 100 ஆகும். தர்க்க ரீதியான பகுப்பாய்வுசார் ஆற்றல் மற்றும் சரியாக நிகழ்வுகளை ஊகிக்கும் ஆற்றலுக்கான பல்தேர்வு வினாத்தாள் ஆகும்.
(ஆ) கூட்டல் அடங்கலாக கணிதம்– நேரம் 01 மணித்தியாலம். மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை 100 ஆகும். கூட்டல் திறனை அளவிடுதல் மற்றும் கணிக்கும் திறனை அளவிடுதல்.

(2) **உடல்சார் தகைமைக்கான பரிசோதனை:**

காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று 1:3 என்ற விகிதாசாரத்தில் எழுத்து மூலமான பரீட்சையில் உச்ச அளவான புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் விண்ணபதாரிகளின் பெயர்களை அகர ஒழுங்குவரிசையில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொண்டு,குறித்த பரீட்சார்த்திகளுக்கு மாத்திரம் உடல்சார் பரிசோதனை அல்லது தாக்குப்பிடிக்கும் ஆற்றல் பற்றிய பரிசோதனை நடாத்தப்படும். மேற்படி பரிசோதனை நடைபெறும் திகதி சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

ஆண் - 1000 மீற்றர் (1 கிலோமீற்றர்) 03 நிமிடம் 44 செக்கன் நேரத்திற்குள் ஓடுதல்.
பெண் - 400 மீற்றர் (0.4 கிலோமீற்றர்) 02 நிமிடம் 05 செக்கன் நேரத்திற்குள் ஓடுதல்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் உடல்சார் தகைமைக்கான பரிசோதனைக் குழு நியமனம் செய்யப்படும்.

(3) **தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை** :

I. மேலே இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பது மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பற்றிய வரையறைகளுக்கு உட்படுகின்றாரா என்பதை பரிசீலித்துப் பார்ப்பதற்காக தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை சபை நியமனம் செய்யப்படும்.

II. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான தலைப்புக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள உச்சளவான புள்ளிகளின் எண்ணிக்கைக்குள், புள்ளி வழங்க நேர்முகப் பரீட்சைக் குழு நடவடிக்கை மேற்கொள்ளும். புள்ளிகள் வழங்கும் திட்டம் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| *புள்ளி வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்* | *உச்சளவான புள்ளிகளின் எண்ணிக்கை* | *தெரிவு செய்துகொள்ள கவனத்தில் கொள்ளப்படும் ஆகக் குறைந்த புள்ளிகளின் எண்ணிக்கை* |
|---|---|---|
| மேலதிகக் கல்விசார் தகைமைகள் | 15 | ஏற்புடையதன்று. |
| ஆங்கில மொழித் தேர்ச்சி | 10 | |
| கணினி அறிவு | 10 | |
| விளையாட்டுத் துறை ஆற்றல் | 20 | |
| தலைமைத்துவம் மற்றும் சமுதாய சேவைகள் | 20 | |
| விசேட திறமைகள் மற்றும் ஆற்றல்கள் | 15 | |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்திய திறமை | 10 | |
| மொத்தம் | **100** | |

iii. உடல்சார் தகைமைப் பரிசோதனை அல்லது தாக்கும் பிடிக்கும் ஆற்றல் பற்றிய பரிசோதனையில் சித்தியடையும் பரீட்சார்த்திகள் மாத்திரம் தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அடிப்படைத் தகைமைகள், தகைமைகளைப் பரிசோதிக்கும் நேர்முகப் பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும். (எழுத்துமூலமான பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்றுக் கொண்ட புள்ளிகள் இந்த சந்தர்ப்பத்தில் அழைக்கப்படுவதில்லை.)

iv. தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையின் போது ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பெற்றுக் கொண்ட புள்ளிகள் மீண்டும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர், குறித்த பரீட்சார்த்திகள் எழுத்து மூலமான பரீட்சையில் மற்றும் தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட ஒட்டுமொத்த புள்ளிகளின் கூட்டுத்தொகையின் ஒழுங்குவரிசையின் அடிப்படையில் உச்சளவான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள பரீட்சார்த்திகள் II ஆம் தர ஜெயிலர்/II ஆம் தர நலன்புரி அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

v. பரீட்சைக்கு தோற்றிய அனைத்து விண்ணப்பத்தாரிகளுக்கும் தனிப்பட்ட வகையில் பெறுபேறுகளை அறிவித்தல் அல்லது www.results.exams.lk இணையதளத்தில் வெளியிடல் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் அறிவிப்புக்கமைவாக மேற்கொள்ளப்படும்.

குறிப்பு: நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது நியமனம் வழங்குவதற்கான தகைமைகளை பூர்த்தி செய்வதாகக் கருதப்பட மாட்டாது.

❖ யாதாயினும் எண்ணிக்கையிலான வெற்றிடங்களை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாதிருப்ப தற்கு நியமன அதிகாரிக்கு தத்துவமுண்டு.

❖ இதில் குறிப்பிடப்படாத ஏதெனுமொரு விடயம் இருப்பின், அது பற்றி சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தீர்மானம் மேற்கொள்வார். சகல விண்ணப்பதாரிகளும் இந்த வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை சட்டங்கள், விதிகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்வதற்குக் கட்டுப்பட்டுள்ளார்கள்.

❖ இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான உரைகளுக்கு இடையே ஏதேனும் இணங்காமை அல்லது ஒவ்வாமை எழும் பட்சத்தில், சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானதெனக் கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

எச்.எம்.என்.சீ. தனசிங்க,
சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் (ப.க).

சிறைச்சாலைகள் தலைமையகம்,
இலக்கம் 150,
பேஸ்லையின் வீதி,
கொழும்பு 09,
2025, ஓகத்து 22.

08-341

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

### குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் I உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025

01. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவிக்குரிய அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் I உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் 2025 ஆம் ஆண்டு கொழும்பில் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

02. (i) பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பணிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சாரத்திகள் கட்டுப்படல் வேண்டும். பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் முடிவே இறுதியானது.

(ii) பரீட்சார்த்திகளுக்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் விதிக்கப்பட்டுள்ள சட்டங்களை மீறுமிடத்து இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

03. பரீட்சைக் கட்டணங்கள்: பரீட்சைக்குரிய பாடங்களுக்கு ஒரே அமர்விலோ அல்லது தனித்தனியாகவோ தோற்ற முடியும். முழுப் பரீட்சைக்கும் அல்லது ஒரு பாடத்திற்கு முதல் அமர்வில் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது. அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு அமர்வுக்கும் ஒரு பாடத்துக்கு ரூ. 500.00 பரீட்சைகச் கட்டணமும் முழுப் பரீட்சைக்கும் ரூபா 1000.00 பரீட்சைக் கட்டணமும் அறவிடப்படும். இந்தப் பரீட்சைக் கட்டணத்தை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் இலங்கை வங்கி பத்தரமுல்லை கிளையின் கணக்கிலக்கம் 7039793 க்கு இலங்கையிலுள்ள எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் வைப்பிலிட்டுப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணபப்பப்படிவத்தில் உரிய கூண்டில் ஒட்டுதல் வேண்டும். (பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்). எக் காரணம் கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது பிறிதொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது.

04. **விண்ணப்பப்படிவம் :**

விண்ணப்பப்படிவமானது இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் படி தயாரிக்கப்படுதல் வேண்டும். அந்த மாதிரிப் படிவத்திற்கு அமைய A4 அளவிலான தாளில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி 01 இலிருந்து 08 வரையிலான தலைப்புக்கள் முதற் பக்கத்திலும் எஞ்சியவை அடுத்த பக்கத்திலும் அமையுமாறு தயாரித்துக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினைத் தயாரிக்கும் போது, பரீட்சையின் பெயரை சிங்கள மொழி விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை தட்டச்சு செய்து தயாரித்துக்கொள்ள முடியுமெனினும் அதனை சரியாகவும் தெளிவாகவும் பரீட்ச்சார்த்தியின் கையெழுத்தினால் பூரணப்படுத்தல் வேண்டும். அதற்கமைய தயாரித்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தை பரீட்சார்த்திகள் திணைக்களத் தலைவர் ஊடாக 2025.09.25 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு,"குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், "சுஹுருபாய", பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். இன்றேல் நிர்வாகப் பிரிவில் விடயத்திற்குப் பொறுப்பான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரிடம் ஒப்படைத்து கடிதம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படுகின்ற கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் தரம் I உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை-2025" எனக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்துடன் இணங்குகின்றதா என்பது தொடர்பில் விண்ணப்பதாரி கவனம் செலுத்துதல் வேண்டும். அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம். (பூரணப்படுத்திய விண்ணப்பத்தின் நிழற் பிரதியொன்றை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.)

05. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் அனைத்து பாடங்களின் போதும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அந்த நோக்கத்திற்காக கீழ்க்காணும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் இலங்கைச் சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும், பரீட்சார்த்திகள் அவர்களின் ஆளடையாளத்தினை நிரூபிக்கும் பொருட்டு தமது முகம் மற்றும் காது என்பவற்றினை மறைக்காது மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். மேலும், தமது ஆளடையாளத்தினை நிரூபிப்பதற்கு மறுப்புத் தெரிவிக்கும் எவரேனும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திற்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். அத்துடன், பரீட்சார்த்திகள் உரிய பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு முன்பாகவும் மண்டபத்தினை விட்டு விலகிச் செல்லும் வரையிலுமான பரீட்சையின் முழு நேரத்திலும் தமது முகம் மற்றும் காது என்பவற்றினை மறைத்தலாகாது.

06. வர்த்தமானி அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட தகைமைகளைக் கொண்டுள்ள பரீட்சார்த்திகள் மாத்திரம் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளனர் என்ற முன் முடிவின் பிரகாரம், விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் பரீட்சார்த்திகளுக்கு இலங்கை நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணையுடன் அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்ட உடன் அது தொடர்பான பத்திரிகை அறிவித்தல் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் வெளியிடப்படும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் அது தொடர்பில் 0112101553 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளருக்கு (நிர்வாகம்) அறிவித்தல் வேண்டும். அதன் போது பரீட்சார்த்தியின் முழுப் பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் என்பன அத்தகைய வினவுகையின் போது குறிப்பிடப்படுதல் வேண்டும். அவ்வாறு வினவும் போது பரீட்சார்த்தி விண்ணபத்தின் பிரதியினையும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியினையும் விண்ணப்பத்தினை அனுப்பி வைத்த பதிவுத் தபாலின் பற்றுச்சீட்டினையும் கைவசம் வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் பரீட்சார்த்தியானவர் கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின், அனுமதி அட்டையின் பிரதியொன்றினை தொலைநகல் மூலமாகப் பெற்றுக்கொள்ள மேற்குறித்த விபரங்களுடனான கோரிக்கைக் கடிதத்துடன் தங்களது தொலை நகல் இலக்கத்தையும் 0115980257 இலக்கம் மூலம் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு தொலைநகல் மூலம் அனுப்பி வைத்தல் பயனுள்ளதாகும்.

07. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம், நிறுவனத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சார்த்தியொருவர் தனக்கு வழங்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டிலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். தனது அனுமதி அட்டையில் குறித்துரைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரொருவர் மூலம் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளன்றே பரீட்சை நிலைய அதிபரிடம் ஒப்படைத்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

08. பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட விண்ணப்பதாரி ஒருவரின் பதவி மற்றும் சேவை நிலையம், பரீட்சைத் தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் ஏற்புடையதாகும். விண்ணப்பத்தை அனுப்பிய பின்னர் அது தொடர்பில் நிகழும் எந்தவித மாற்றங்களும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

09. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டை உள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்ற வகையில் திணைக்களத் தலைவர்களினால் கடமை லீவு வழங்கப்படுதல் வேண்டும். இதன் பொருட்டு பிரயாணச் செலவு வழங்கப்படமாட்டாது.

10. இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும். அபேட்சகர் ஒருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஊடக மொழியாக, போட்டிப் பரீட்சையொன்றின் மூலம் அரசாங்க சேவையில் நியமனம் பெற்றவர் எனின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய ஊடக மொழியையும் போட்டிப் பரீட்சையின்றி அரசாங்க சேவையில் நியமனம் பெற்றிருப்பின் அரசாங்க சேவையில் இணைவதற்காக தகைமைப் பெற்ற பரீட்சையில் தோற்றிய ஊடக மொழியையும் தெரிவு செய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய அனைத்து பாடங்களுக்கும் ஒரே ஊடக மொழியில் தோற்றுதல் வேண்டும். அத்தோடு விண்ணப்பித்த ஊடக மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

11. **பரீட்சைத் திட்டம் :**

1. பரீட்சையின் பெயர்: குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் I இற்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை.

2. பரீட்சை தொடர்பான விபரம் :

| *பாடம்* | | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்திப் புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01 | சம்பவக் கற்கை | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| 02 | தாபன விதிக்கோவை, நடைமுறை ஒழுங்கு விதிகள் மற்றும் நிதி ஒழுங்கு விதிகள் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |

3. பரீட்சையை நடாத்தும் அதிகாரி :
இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம்

4. பரீட்சை நடாத்தப்படுவது எவ்வளவு காலத்திற்கு ஒருமுறை என்பது பற்றி : வருடத்திற்கு ஆகக் குறைந்தது இரண்டு முறை

5. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| *பாட இலக்கமும் பாடமும்* | *வினாப் பத்திரத்தின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| 01 | சம்பவக் கற்கை | 1. எல்லைக் கட்டுப்பாடு (Border Control)<br>2. மனித ஆட்கடத்தல் (Human Trafficking)<br>3. மனித வியாபாரம் ( Human Smuggling)<br>எனும் பாடங்களுக்கு ஏற்புடைய சம்பவக் கற்கை |
| 02 | தாபன விதிக்கோவை, நடைமுறை ஒழுங்கு விதிகள் மற்றும் நிதி ஒழுங்கு விதிகள் | 1. தாபன விதிக்கோவையின் அத்தியாயங்கள் V, VIII, XII, XIV, XV, XVI, XLVII, XLVIII<br>2. இல. 2310/29 மற்றும் 2022.12.14 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்<br>3. நிதி ஒழுங்கு விதிகள் (நி.ஒ. 124, 125, 127, 128 மற்றும் 135, நி.ஒ. V, VI, XI அத்தியாயங்கள் மற்றும் VII அத்தியாயத்தின் பகுதி II) மற்றும் கொள்வனவுக்கான (கொள்முதல்) அடிப்படைகள் மற்றும் ஏற்பாடுகள் |

குறிப்பு : * மேலுள்ள பாடங்களுக்கு ஒரே அமர்விலோ அல்லது தனித்தனியாகவோ தோற்ற முடியும்.

* உரிய காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடையத் தவறுமிடத்து அதன் பின்னர் வரக்கூடிய சம்பள ஏற்றம் பிற்போடப்படுவற்கு காரணமாக அமையலாம்.

12. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைப் பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாக அமையமாட்டாது.

13. இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானது.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலில் மொழிப் பிரயோகத்தில் ஏதேனும் முரண்பாடு அல்லது பொருந்தாமை காணப்படுமிடத்து சிங்கள மொழி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஐ. சமிந்த பத்திராஜா,
குடிவரவு மற்றும் குடியகல்வுத்
கட்டுப்பாட்டாளர் நாயகம் (பதில் கடமை),
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
“சுஹுருபாய,
பத்தரமுல்லை”,
2025, ஓகத்து 26.

08-355

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*